மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 13 திங்கட்கிழமை (24-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 89


## தம்மைக் கொல்லச் சதி என கூறுகிறார் அநுரா!

கொழும்பு, பெப். 24

''உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் என்னைக் கொல்ல அரசாங்கத்திலுள்ள பலம் வாய்ந்த சில சக்திகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.''

- இவ்வாறு ஐ. தே. கட்சி எம். பியும், பிரதமர் சிறிமாவோவின், மகனும் ஜனாதிபதி சந்திரிகாவின் தம்பியாருமான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பொலீஸ் மா அதிபருக்கு தாம் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'' எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தில் பலம் வாய்ந்த சில சக்திகள் இந்த சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு 23 நாள்கள் விநியோகம் இல்லை!

லண்டன் பெப். 24

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிக்குரிய நிவாரண உணவு விநியோகம் கடந்த 23 தினங்களாக இடம்பெறவில்லை என்று வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடங்களுக்கு நிவாரணப் பொருள்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களமே தனது செலவில் அனுப்பி வைப்பது தான் நடைமுறை.

ஆனால், இந்த நடைமுறையின் படி, இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் இருந்து தாண்டிக்குளம் இராணுவ சோதனைப் பகுதியில் உள்ள சாந்தசோலைக்கு வந்து பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகளுக்கான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தரை வழியாக
# யாழ்ப்பாணத்துக்கு மிக விரைவில் பாதை!

## ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு, பெப்ரவரி 24

**"கொழும்பில் இருந்து மன்னாருக்கு இப்போது தரைமார்க்கமாகப் பிரயாணம் செய்ய முடியும். கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தரைமார்க்கப் பாதையை ஏற்படுத்தும் காலம் அதிக தூரத்தில் இல்லை."**

**— இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

எம்பிலிப்பிட்டியவில் நேற்றுப் பிற்பகல் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

வடக்கு யுத்தத்தை இந்த வருட இறுதிக்குள் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து நாடு முழுவதும் சமாதானத்தை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா-மன்னார் பாதை திறப்பது பற்றி அறிவிப்பு?

வவுனியாவுக்கும்—மன்னாருக்கும் இடையேயான 48 மைல் தூரப் பாதையை மக்கள் பாவனைக்குத் திறப்பது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஓரிரு தினங்களில் வெளியாகும்என்று 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

'எடிபல' இராணுவ நடவடிக்கையின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாதையருகே 1 மைலுக்கு குடியிருக்கத் தடை!

படையினர் கைப்பற்றியுள்ள வவுனியா — மன்னார்ப் பாதையின் இருமருங்கிலும் ஒரு மைல் தூரத்திற்கு மக்களைக் குடியிருக்க வேண்டாம் என்று படையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த அறிவிப்பின் காரணம் என்னவென்பது குறித்துப் படையினர் தகவல் வெளி

(8ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்-யாழ். பாதையை திறக்கவும் வாய்ப்பு?

வவுனியா — மன்னார் பாதையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த படையினர் இலுப்பைக்கடவை, பூநகரி, சங்குப்பிட்டிப் பாதை (Ferry) ஆகியவை ஊடாக யாழ்ப்பாணத்துக்கு விநியோகப் பாதையைத் திறக்கும் வாய்ப்பு உள்ளது என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளாடி படை முகாமை பாதுகாக்கும் திட்டமாம்!

முல்லைத்தீவு இராணுவத் தளத்தை கடந்த ஆண்டு சுற்றிவளைத்துத் தாக்கி அழித்தது போல் மன்னார் தள்ளாடி படைமுகாமையும் அழிக்க புலிகள் குறிவைத்துள்ளனர் எனக் கிடைத்த உளவுத் தகவல்களை அடுத்தே, தற்பாதுகாப்பு முன்னேற்பாடாக ''எடிபல'' இராணுவ நடவடிக்கையை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வில்பத்துக்குள் புலிகள் ஊடுருவ வாய்ப்புண்டு!

'எடிபல' இராணுவ நடவடிக்கை மூலம் மடு — வில்பத்துச் சந்தியைப் படையினர் கைப்பற்றியுள்ள போதும், வில்பத்து சரணாலயக் காடுகளுக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க முடியாது என்று 'சண்டே லீடர்' பாதுகாப்புச்செய்தியாளர்'தெரிவித்துள்ளார்.

மேற்படி சந்தியைப் படையினர் கைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம், பெப். 24

கடந்த இரு தினங்களாக தடைப்பட்டிருந்த பலாலி — கொழும்பு விமான சேவை இன்று வழமைக்கு திரும்பும் என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இரு விமானங்கள் இன்று சேவையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் — விமானத்தில் பயணம் செய்ய சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 232க்கு உட்பட்டவர்களுக்கும், 271 முதல் 278 வரையான பட்டியல்களில் உள்ளவர்களுக்கும் மற்றும் 330,385 ஆகிய பட்டியல்களைச் சேர்ந்தவர்களுக்கும் அனுமதி கிடைத்துள்ளது என்று சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (உ-3)

## இன்றும் நாளையும் கப்பல் சேவைகள்

யாழ்ப்பாணம், பெப். 24

காங்கேசன்துறையில் இருந்து இன்றும், நாளையும் திருகோணமலைக்கு கப்பல் சேவைகள் இடம்பெறவுள்ளன என்று சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இன்றைய கப்பலில் 550 பயணிகளும், நாளைய கப்பலில் 290 பயணிகளும் பயணம் செய்ய முடியும்.

மன்னாருக்கான கப்பல் சேவை இல்லாத காரணத்தால், மன்னாருக்கு செல்ல விரும்பும் அரசாங்க, கூட்டுஸ்தாபன ஊழியர்களை திருமலை வரையே அழைத்துச் செல்ல முடியும் என்றும் —

இவ்வாறு செல்ல விரும்பும் அரசாங்க, கூட்டுஸ்தாபன ஊழியர்கள் இக்கப்பல்களில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 15,000 பேர் வவுனியா வருகை!

கொழும்பு,பெப். 24

வவுனியா, நொச்சிமோட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாகலாம் என்ற காரணத்தாலும்—

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கி படைநகர்வு ஆரம்பமாகலாம் என்பதாலும்—

வவுனியா மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற வவுனியா வடக்கு, நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து சுமார் 15 ஆயிரம் மக்கள் வவுனியா நகருக்குள் இடம் பெயர்ந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரைப் புலிகளால் துண்டாட முடியும்?

''மன்னார் வவுனியா வீதியை படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள போதிலும், மன்னாரைத் துண்டாடித் தனிமைப்படுத்துவதற்கான புலிகளின் தாக்குதலுக்கு நீண்டகாலம் எடுக்கப் போவதில்லை''— என்று 'த ஐலண்ட்' பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் அதன் பாது

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே பாதை திறக்க 20,000 துருப்புகள்தேவை

வவுனியாவுக்கும், கிளிநொச்சிக்கும் இடையேயான 65 கிலோமீற்றர் தூரப்பாதையைக் கைப்பற்றி கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள 20 ஆயிரம் துருப்புக்கள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு பத்திரிகை வட்டாரங்கள் இத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மடு அகதிகளுக்கு 40 லொறிகளில் உணவு

''எடிபல'' நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து மடுவில் தஞ்சமடைந்துள்ள 15 ஆயிரம் மக்களுக்கு உரிய அவசர உணவு வகைகள் நாளை 40 லொறிகளில் அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா — மன்னார் வீதியில் உள்ள ஓரிடத்தில் இந்தப் பொருள்கள் இறக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறாயிரம் ஷெல்களில் 29 மட்டுமே ஏவப்பட்டன!

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் ஆறாயிரம் ஆட்லறி ஷெல்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் அவற்றில் 29 ஷெல்கள் மட்டுமே புலிகளால் இதுவரை பாவிக்கப்பட்டுள்ளன என்று 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'டம்மி' ஆட்லறிகளை புலிகள் வைக்கின்றனர்

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலின் போது தாம் கைப்பற்றிய பல்வேறு வகையான ஆட்லறிகள் போன்ற உருவங்களை ('டம்மி'களை) தயாரித்து பல இடங்களில் புலிகள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 18 — 06 — 1920

மறைவு: 19 — 02 — 1992

## இராசையா செல்வராசா

**திதி: 24-02-1997**

நல்வாழ்வு பெற வழிகாட்டி
நிறையன்பு செலுத்திய எங்கள்
குடும்ப தெய்வமே!
உங்கள் நீங்கா நினைவுகளுடன்
வாழ்கின்றோம்.
ஆண்டவன் காலடியில் உங்கள்
ஆன்மா அமைதி பெறும்.

**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**

''சுபசதனம்'',
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(45469)

# மரண அறிவித்தல்கள்

மூளாய்

## முருகேசு குமாரவேலு

(சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஓய்வு பெற்ற கணித, ஆங்கில ஆசிரியர்)

முருகேசு குமாரவேலு ஓய்வுபெற்ற ஆசிரியர் அவர்கள் 21 - 02 - 1997 இல் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு அன்னமுத்து தம்பதிகளின் ஏகபுதல்வனும், தங்கரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், செல்வசக்தி (ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), முருகதாசன் (ஜேர்மனி), ஞானசக்தி (ப. தெ அ. கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்), கண்ணதாசன் (பயிற்சிக் கல்லூரி, வவுனியா), அமிர்தசக்தி (மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஸ்ரீரங்கன் (வ. தெ. மே. பிரதேசசபை அலுவலகம், பண்டத்தரிப்பு) அவர்களின் மாமனாரும், நிரோசனா, விஸ்னுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-02-1997 சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன. அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**S. ஸ்ரீரங்கன்**
**(மருமகன்)**

மூளாய்,
சுளிபுரம்.

(45458)

## வெற்றிவேலு உருத்திரசிங்கம்

**(பெரிய தம்பி)**

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வெற்றிவேலு உருத்திரசிங்கம் 17 - 2 - 97 இல் கனடாவில் அகால மரணமடைந்தார்.

இவர் வெற்றிவேலு சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், சந்திரமாலாவின் (கனடா) அன்புக் கணவரும், செல்லத்துரை செல்வமணி ஆகியோரின் சிரேஷ்ட மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23-2-97) ஞாயிறு கனடாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**செல்லத்துரை (துரை)**
(மாமன்)

102, கண்டி றோட்,
கச்சேரியடி,
அரியாலை.

(45444)

## திருமதி தங்கம்மா பொன்னம்பலம்

தெல்லிப்பழை தென்மேற்கு, கருகம்பனை காலஞ்சென்ற மலாயன் டாக்டர் பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவி தங்கம்மா பன்னாலையிற் பிறந்து மலேசியா, கருகம்பனை ஆகிய இடங்களில் வசித்து தெகிவளையில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பொலீஸ் அத்தியட்சகர் இராஜேஸ்வரன், இராஜேஸ்வரி (U.K), பரமேஸ்வரி (கனடா), மகேஸ்வரி (தொல்புரம்), புவனேஸ்வரி (தாவடி), இராஜேந்திரன் (ஆஸ்திரேலியா), அருளம்பலம் (பரிஸ்டர் — U.K), இளையதம்பி (U.K), கமலாதேவி (தெகிவளை), கமலாம்பிகை (தெகிவளை), நகுலேஸ்வரி (U.K), நகுலேஸ்வரன் (U K) ஆகியோரின் பாசமிகு அன்னையும், திலகஞானம், குணரத்தினம், சச்சிதானந்தம், பாலகிருஷ்ணன், சுப்பிரமணியசுவாமி, இரத்தினாம்பிகை, சாரூபகுமாரி, நாகேஸ்வரி, தேவதாசன், சகாதேவன், சாந்திக்குமார், ஞானேஸ்வரி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மகள் கமலாம்பிகை சகாதேவன் அவர்களின் 32A, உள்பிளவர் வீதி, தெகிவளையில் நடைபெற்று பூதவுடல் கொழும்பு - 8 கனத்தை மயானத்தில் இன்று பிற்பகல் தகனம் செய்யப்படும்.

தகவல்:
**புவனேஸ்வரி சுப்பிரமணியசுவாமி**

சுதுமலை வீதி,
தாவடி.

(45468)

### இரு தரப்பு உறவுகளைச் சீர்செய்ய ஏற்பாடு

# தமிழக அதிகாரிகள் குழு விரைவில் இலங்கைக்கு!

கொழும்பு, பெப். 24

தமிழகத்துக்கும் — இலங்கைக்குமிடையில் உறவுகளை பலப்படுத்தும் ஏற்பாடாகத் தமிழக அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு வரவிருக்கிறது.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா அண்மையில் தமிழகத்துக்கு விஜயம் செய்து தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இரு தரப்புக்குமிடையில் உறவுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக ''த ஐலண்ட்'' பத்திரிகையின் நேற்றைய ஞாயிறு பதிப்பின் தலைப்புச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு தரப்புக்குமிடையில் உறவுகள் மேம்பட தமிழக அதிகாரிகள் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புமாறு இப் பேச்சின் போது இலங்கைத் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

இதை ஏற்று தமிழக முதல்வர் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பவிருக்கிறார்.

பாக்கு நீரிணையில் மீன்பிடிப்பது தொடர்பான திட்டத்தை வகுப்பது குறித்து இக்குழு இலங்கையில் பேச்சுக்கள் நடத்தும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

அதே சமயம் இக்குழு கொழும்பில் பேச்சு நடத்தவுள்ள ஏனைய விடயங்களின் விவரம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (உ-3-150)

## பொலீஸார் இடமாற்றம்

இரத்தினபுரி பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மேலும் 39 பொலீஸாருக்கு மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் பணிபுரியும் மேலும் 123 றிசேர்வ் பொலீஸாருக்கு இன்று அல்லது நாளை இடமாற்றக் கடிதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகொலை செய்யப்பட்ட இரத்தினபுரி மாவட்ட எம்.பியான நாலந்தா எல்லாவெலவின் இறுதிக் கிரியைகளின் போது பொதுமக்கள் பொலீஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவதை அடுத்து இரத்தினபுரிப் பகுதியில் கடமையாற்றிய பொலீஸார் அணி அணியாக வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## ரெலோவும் விரைவில் யாழ். வரும்

யாழ்ப்பாணம், பெப். 24

'ரெலோ' அமைப்பும் விரைவில் யாழ்ப்பாணத்தில் தனது அலுவலகத்தைத் திறக்க விருப்பதாக அறியவருகின்றது.

இது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அக்கட்சியின் குழு ஒன்று அடுத்து வரும் தினங்களில் யாழ்ப்பாணம் வரும் என்றும் தெரியவந்தது. (உ)

## விசாரணை நடத்துவதற்கு குழு அமைப்பு

மணிலா, பெப். 24

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் 'அன்ரனோவ் 32' விமானம் வீழ்ந்து நொருங்கியது குறித்து விரிவான விசாரணை நடத்த உயர்மட்ட இராணுவக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. (உ-3)

## ஆயுதங்களுக்கு உச்சவரம்பு!

கொழும்பு, பெப். 24

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள் ஆகியோர் தமது பாதுகாப்புக்கு என எத்தனை துப்பாக்கிகளை வைத்திருக்க முடியும் என்பது தொடர்பாக உச்ச வரம்பு ஒன்றை விதிப்பது குறித்து அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஒவ்வொருவரின் உயிராபத்துக்குறித்து ஆராய்ந்து அதற்கேற்ப சான்றிதழ் வழங்கப்படும்.

அந்த சான்றிதழின் படியே அவருக்கு துப்பாக்கிகள் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்படி சில அரசியல் வாதிகளுக்கு துப்பாக்கிகள் கிடைக்காமலும் போகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3-150)

**யூனிவேர்சல்**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**A/L 98**
**கணக்கியல்**
**பாலவாசன்**
**வங்கிக் கணக்கிணக்கக் கூற்று**
**புதன்: 4 — 5 மணி**
**ஆரம்பம் 26 - 02 - 97**
(45471)

# 3 ஆம் மாத நினைவஞ்சலி

அன்னை மடியில்: 14—02—1963

ஆண்டவன் அழைப்பில்: 23—11—1996

## செல்வி சாந்தினி பால்கிருஷ்ணன்

சின்னச் சிரிப்பாலே - எம்
  சிந்தையைக் கவர்ந்தே
சில காலம் எம்முடன்
  சேவையால் இணைந்தாய் - சாந்தி!
வளமான வாழ்வு காண - நீயும்
  வானில் பறந்த வேளை
கண்ணீர்க் கடலில் எமை ஆழ்த்தி
  காலன் உன்னைக் கவர்ந்தே சென்றானோ!
சாந்தி! உன் ஆத்ம சாந்திக்காய்
  ஆண்டவனை வேண்டி நிற்கும்;

**சக தாதிய உத்தியோகத்தர்கள்.**

**அரசினர் பொது வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(45466)

# மரண அறிவித்தல்

## குமாரசாமி திலிப்குமார்

(முன்னாள் எழுதுவினைஞர், மக்கள் வங்கி)

ஆடியபாதம் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்டவரான குமாரசாமி திலிப்குமார் 16 - 02 - 1997 இல் காலமானார்.

அன்னார் குமாரசாமி - தில்லைநாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லர் குமாரசாமி - காலஞ்சென்ற இலட்சுமி ஆகியோரின் மருமகனும், விஜயகுமாரியின் அன்புக் கணவரும், சஞ்ஜீவ், ஜன்ஷி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார் (டென்மார்க்), அஞ்ஜனா (ஹொலண்ட்), சந்திரகுமார் (ஜேர்மனி), றஞ்ஜிதா (ஜேர்மனி), காலஞ்சென்ற சாந்தா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்வச்சாமி (எழுது வினைஞர், கப்பல் சரக்கு கூட்டுத்தாபனம்), இராஜதுரை (முன்னாள் எழுது வினைஞர்), இராஜரட்ணம் (சட்டத்தரணி), புவனேஸ்வரி (ஆசிரியை), பத்மாவதி, ரூபராணி (ஆசிரியை) ஆகியோரின் மருமகனும், திருமதி தவமணி தவகணேசன் (ஹொலண்ட்), திருமதி புஸ்பமணி மயில்வாகனம் (கனடா), ராமகிருஷ்ணன் (ஹொலண்ட்), தெய்வேந்திரம் (ஜேர்மனி), நடேசமூர்த்தி, ஆனந்தன், தில்லைராசா, றஞ்ஜனாதேவி (டென்மார்க்), சாந்தா (ஜேர்மனி), சறோஜினிதேவி, கனகலட்சுமி, பாக்கியம், சாயாதேவி, வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20 - 02 - 1997 வியாழக்கிழமை ஹொலண்டில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் மிகவும் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**அ. இராஜதுரை**
(மாமா)

55, ஆடியபாதம் வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(45467)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர்

# சீனப் புதிய தலைமைக்கு மக்கள் ராணுவம் ஆதரவு

பீஜிங், பெப். 24

ஜனாதிபதி ஜியாங் செமினின் தலைமைப் பீடத்துக்கு தமது முழு ஆதரவு தொடர்ந்து இருக்கும் என்று சீன மக்கள் இராணுவத்தின் முக்கிய மூன்று பிரிவுகளும் சூளுரைத்துள்ளன.

சீனத் தலைவர் டெங் ஷியா ஓ பிங்கின் மறைவை அடுத்து சீனாவின் புதிய தலைமைத்துவத்துக்கு இராணுவத்தின் முழு ஆதரவு முன்னரைப் போன்று கிடைக்குமா என்ற கேள்வி ஒரு சிலரால் எழுப்பப்பட்டு வந்தது.

தற்போது சீனமக்கள் இராணுவம் புதிய தலைமைத்துவத்துக்கு தனது நிபந்தனையற்ற ஆதரவைத் தெரிவித்துள்ளது.

தமது அரசாங்கம் சீனாவை தொடர்ந்து மேம்பட்ட முறையில் ஆட்சி செய்யும் என்றும் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்துக்கும் பெரிய பங்களிப்பை வழங்கும் என்றும் ஜியாங் செமின் தலைமைத்துவம் தெரிவித்துள்ளது.

சீனாவில் உள்ள பெரிய நிலக்கரிச் சுரங்கங்கள் தலைவரின் மறைவால் ஏற்பட்ட கவலையைத் தங்கள் பலமாக மாற்றி இன்னும் அதிக அளவான நிலக்கரியைத் தோண்டப் போவதாக அறிவித்துள்ளன.

(ஐ)

## உறைந்து போன ஏரியில் மீன்பிடிக்கும் விநோதப் போட்டி!

### பின்லாந்தில் நடக்கிறது!

ஹெல்சிங்கி, பெப். 24

பின்லாந்தில் உள்ள உறைந்துபோன ஏரி ஒன்றில் மீன் ஒன்றைப் பிடித்து விடும் விநோதமான போட்டி ஒன்றைக்காண பல்லாயிரக்கணக்கானோர் கூடியுள்ளனர்.

ஒருகோடி 10 லட்சம் ரூபா பரிசைப் பெற்றுத் தரும் அந்த நன்னீர் மீன் விசேடமாக அடையாளம் இடப்பட்டு போட்டி ஏற்பாட்டாளர்களால் அதே இனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீன் வகைகளுடன் சேர்த்து கடந்த இலையுதிர் காலத்தின் போது ஏரியில் விடப்பட்டிருக்கிறது.

அந்த மீனைப் பிடித்துவிடுவோம் என்ற நம்பிக்கையுடன் ஆயிரக்கணக்கான மீனவர்கள் அங்கு திரண்டுள்ளனர்.

தலைநகர் ஹெல்சிங்கிக்கு வடக்கே கியூறி என்ற ஊரில் இந்த பனியில் மீன் பிடிக்கும் வருடாந்தப் போட்டி நடைபெறுகிறது. (ஐ)

## சீனத் தலைவரின் உடல் இன்று தகனம் செய்யப்படும்

### அஸ்தி மட்டுமே அஞ்சலிக்கு!

பீஜிங், பெப். 24

மறைந்த சீனப் பிரதமர் டெங் ஷியா ஓ பிங்கின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவ ரீதியான இறுதிச் சடங்கு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிக்கிறது. அதற்கான ஒத்திகையில் இராணுவம் ஈடுபட்டதாக செய்திகள் தெரிவித்தன.

பீஜிங்கில் உள்ள சுடுகாட்டுக்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும் என்றும். —

அங்கிருந்து அவரது அஸ்தி நகரின் மத்தியில் உள்ள இல்லத்துக்கும், பின்னர் அங்கிருந்து தியனன்மென் சதுக்கத்தில் உள்ள மக்கள் மகாமண்டபத்துக்கும் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக பீஜிங்கில் உள்ள பி. பி. ஸி செய்தியாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தனிப்பட்ட முறையில் கவலையை வெளிப்படுத்தியோர் கைது!

பீஜிங், பெப். 24

தனிப்பட்ட முறையில் அனுதாபம் தெரிவிப்பதற்கு உள்ள தடையை மீறி தங்கள் கவலையை வெளியிட்ட பலர் பீஜிங்கில் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தலைவர் பிங்கின் சொந்த மாகாணமான சிச்சுவானில் மக்கள் இயல்பாக வெளிப்பட்ட தங்கள் கவலையைப் போக்க நகரின் மத்தியில் கூடி மலர்வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தினர். ஆனால் அந்த மலர் வளையங்கள் உடனடியாகப் பொலீஸாரால் அப்புறப்படுத்தப்பட்டன.

(ஐ)

# 25 ஆயிரம் றுவாண்டா அகதிகள் ஐ. நா. முகாமை விட்டு வெளியேற்றம்

### ஸயரில் புதிய நெருக்கடி

கின்ஷாஸா, பெப். 24

கிழக்கு ஸயரில் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய முகாமில் தங்கியிருந்த 25 ஆயிரத்துக்கும் அதிகமான றுவாண்டா நாட்டு அகதிகள் அங்கிருந்து காணாமற் போயுள்ளதாக ஐ நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

சண்டை நடைபெறும் கிழக்கு ஸயரின் முன்னரங்கப் பகுதியில் அமைந்திருந்த இந்த முகாமைவிட்டு அகதிகள் வெளியேறிச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இவர்களது வெளியேற்றத்துக்கு காரணம் என்ன என்பது தெரியவில்லை என்றும் —

விமானத்தில் இருந்து முகாமை நோட்டமிட்ட போது அங்கிருந்த அகதிகள் காணாமற் போயிருப்பது தெரிய வந்ததாகவும் அகதிகளுக்கான ஐ. நா தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முகாமைவிட்டு வெளியேறிய றுவாண்டா அகதிகள் ஸயர் நதியின் கரையோரம் ஸயர் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கிண்டு நகரை நோக்கிச் செல்லக்கூடும் என்று கருதப்படுகிறது.

அடர்ந்த காடுகளிடையே அகதிகள் தற்போது சிக்குண்டிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

சுமார் 100 கிலோ மீற்றர் தொலைவுக்கு அடர்ந்த காடுகளூடாக பயணம் செய்தே கிண்டு நகரை அகதிகள் சென்றடைய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

ஸயரில் சண்டையை நிறுத்த தென்னாபிரிக்கா மேற்கொண்டுள்ள சமரச முயற்சிக்கு ஆதரவாக மோதலை நிறுத்தி வைக்கப் போவதாக கிளர்ச்சியாளர்களின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### சூட்டுக்கொலை

ஸியா முஸ்லீம் சமூகத்தின் முன்னணி உறுப்பினர் ஒருவர் பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வழக்கறிஞரான இவர் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுனி முஸ்லீம் போட்டிக் குழுவினரே இக்கொலையைச் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## உலக அரங்கில்

# அரசியல் ஆதாயங்களுக்கான சீர்திருத்தங்களே நாட்டின் சீரழிவு

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினையாகத் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினை காணப்படுகிறது. காலனித்துவ ஆட்சியாளரின் கொள்கைகளும், இந்நாடுகளுக்கே உரிய விசேட தனித்துவமான இயல்புகளும் இதற்குக் காரணங்களாக உள்ளன.

இலங்கையும் இப்பிரச்சினையிலிருந்து விடுபடமுடியாத மிகமோசமான நிலையிலுள்ளது. தேசிய ஒருமைப்பாட்டின் உணர்வுகள் தேசியவாத அரசியலியக்க செயல்முறையிலிருந்து தோற்றம் பெறுகிறது.

அவ்வகையில் இலங்கையின் தேசியவாதம் தனக்கேயுரிய பல வெளிப்படையான தனித்துவங்களை கொண்டுள்ளது. இலங்கையின் நவீன வரலாற்றின் தேசியவாதக் கிளர்ச்சிகள், சீர்திருத்த அரசியல்வாதிகளின் கொள்கைகள், மிதவாத பழைமை பேண்வாதிகளின் செயல்கள், இவற்றுடன் சிங்கள பௌத்த இனவாதிகளின் தேசியவாத வெளிப்பாடுகளும், தனித் தமிழ் தேசிய உணர்வு உந்தல்கள், முஸ்லிம்களின் தேசிய எண்ணங்களும், மலையக மக்களின் கனவுகளும் எல்லாம் இலங்கையின் தேசியவாத பல்லினப் பிரிவுகளைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது. இவ்வகையில் ஒட்டுமொத்த தேசிய ஒருமைப்பாடு ஏற்பட பல தடங்கல்களை நாடு எதிர்நோக்கி உள்ளது. இதற்கு இன்னும் பல தெளிவான காரணங்களும் உள்ளன.

★ பல்லின சமூக இனத் தன்மைகள், அரசியலில் மதம்.

★ புவியியல் வாழிட அமைவுகள்.

★ பெரும்பான்மையோர் ஆதிக்க உணர்வும், சிறுபான்மையோர் தாழ் உணர்வுகளும் நம்பிக்கை இன்மைகளும்.

★ சமூகக் கட்டமைப்பின் சீர்கேடுகளும் உளத்தாக்கங்களும்.

★ உயர்வர்க்க குழாமினரின் அரசியல் செல்வாக்கின் இலாபநோக்கம்.

★ அரசியல் திட்ட முரண்பாடுகளும் தேசியவாத உணர்ச்சிவசப் படுத்தலும்.

★ பிரதி நிதித்துவ முறையும் அதன் குறைபாடுகளும்.

★ தேசிய அடிப்படையில் அமைய முடியாத கட்சிகள்.

★ தேசிய சுயலாப நோக்கம் கொண்ட அமுக்கக்குழுக்கள்.

★ மட்டுப்படுத்தப்பட்ட பொருளியல் வளங்களும் கல்வி முறைக் குறைபாடுகளும்.

★ வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பக்கச்சார்பு.

★ சர்வதேச அரசியல்— பொருளாதார — இராணுவ தொடர்பு சாதனத் தாக்கங்கள்.

இவ்வாறாக மிகப்பல காரணங்களின் விளைவாக இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டின் பிரச்சினைகள் மிக விரிவடைந்துவிட்டன. இவ்வகையில் சிங்கள - தமிழ் மக்களிடையே பல முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுகின்றன. இவை தேசியவாத உணர்ச்சிகளைத் தூண்டி அரசியல் இலாபம் தேடமுற்பட்டவர்களின் செயல்களாகவே இருந்தன. இச்செயல்கள் வன்முறைகளாக வெடித்து பெரும் ராணுவ முனைப்புகளையே ஏற்படுத்தி விட்டன. இவை பல கோணங்களில் பல்வேறு அனுபவங்களை இந்நாட்டிற்கு ஏற்படுத்திவிட்டன.

ஓர் இனத்தின் மீது இன்னொரு இனம் முன்னெப்போதும் இல்லாதளவு யுத்த அபாயத்தை [illegible] விளைந்தாலும்கூட: யுத்த அபாயத்தை எதிர்நோக்கியவர்கள் அதைவிட அபாயமாய் பதிலடி கொடுத்தாலும் கூட: தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கப் பெரும்பாலானவர்கள் ஆதரவாகவே உள்ளனர்.

இதற்கு நாட்டில் வாழும் பல்லின மக்களின் சமூகப் பொருளாதார, கலாசார, புவியியல், குடிசனப்பரம்பல் போன்ற காரணிகள் ஆராயப்பட்டு அரசியல் ரீயதிான தீர்க்கதரிசன சிந்தனைகளுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்ற வேண்டியிருக்கிறது. இதற்கு இக்காலமே சிறந்தது

உலகில் எந்தவொரு தேசிய இனப்பிரச்சினைகளையும் இராணுவமுறையில் தீர்க்க முடியாதென்பதை முடியப் போகும் 20ஆம் நூற்றாண்டு பறைசாற்றி உள்ளது.

இலங்கையின் இப்பிரச்சினையை முற்றுமுழுதாகத் தீர்க்கமுடியாமல் போனமைக்குப் பல காரணங்களும் நோக்கப்பட்டது. இன்று அரசியல் ரீதியாக விரைவான மாற்றம் இல்லாவிடினும் எல்லா மக்களிடையேயும் தற்போது ஓர் இருள் சூழ்ந்த காலமாகவே உள்ளது. இது எல்லாரையும் வருத்துகின்றது. எனவே இனியாவது அரசியலில் குறுகியகால சுயலாபங்களை விடுத்து சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் உத்தரவாதம் செய்ய அரசியல்வாதிகள் முன் வரவேண்டும்.

மானிட நாகரிகத்தின் உயிர் வாழ்வை உறுதிசெய்து சகவாழ்வு காணும் புதியதோர் இலட்சியஎழுச்சிஇனங்களுக்கிடையில் எழவேண்டும். ஒற்றையாட்சி என்று இழந்தவை ஏராளம். எனவே ஒவ்வொரு இனமும் தன்னைத் தானே ஆண்டு தனது பிரச்சினையை சுயநிர்ணயம் செய்து தீர்க்கும் வல்லமையைப் பெறவேண்டும். அதனூடாக ஒருமைப்பாட்டை கட்டியெழுப்ப முடியும்.

ஆனால் இக்கருத்தை ஜீரணிக்கவே பலருக்கு முடியாதுள்ளது.

இன்று உலகம் மாறிவிட்டது இனம், நாடு உலகம் என்ற ரீதியில் பரந்த பகுத்தறிவுச்சிந்தனை வேற்றுமைகளை விலக்கிவருகிறது. இதுவரையும் இலங்கையில் அரசியல் விளம்பரங்களுக்கும் ஆதாயங்களுக்கும் குறுகிய வர்த்தக நோக்கங்களுக்குமாக சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இவையே இன்று நாட்டைச் சீரழிக்கின்றன.

மனித உரிமைகள் மனிதனை மனிதன் நேசிக்கும் பண்புகள் அழிந்தமைக்கும் மேற்கூறிய அரசியல் நோக்கங்களே காரணமாகும். இவை அப்புறப்படுத்தப்படும் போதுதான் இலங்கைத்தீவு அழகிய இராஜகுமாரியாக இந்துமா கடலில் வீற்றிருப்பாள்.

★

(நன்றி: செங்கோல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து சேவையை சீராக்க
# 20 பஸ் வண்டிகள் உடன் தேவை

## யாழ். மத்திய பஸ் நிலையத்தில் பயணிகள் வெயிலில்

சண்டிலிப்பாய், பெப். 24
யாழ். மாவட்டத்தில் பயணிகளின் சிரமங்களைத் தவிர்த்து ஓரளவு போக்குவரத்து வசதியை ஏற்படுத்த இருபது பஸ் வண்டிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் கொழும்பில் உள்ள தலைமையகத்திற்கு இவ்வாறு கோரிக்கை அனுப்பியுள்ளார்.

பிரதான சேவைகளில் கூட தற்போது ஒவ்வொரு பஸ் வண்டிகளே ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

புதிதாகப் பல வீதிகளில் சேவைகளை உடன் ஆரம்பிக்க வேண்டி உள்ளது. ஆனால் பஸ் வண்டிகள் பற்றாக்குறையாக இருப்பதால் அவற்றை ஆரம்பிக்க முடியவில்லை.

யாழ்ப்பாணம் — அளவெட்டி சேவை, யாழ்ப்பாணம் — மூளாய் சேவை, கொடிகாமம் — வரணி ஊடான பருத்தித்துறை சேவை, சாவகச்சேரி — சங்கானை சேவை ஆகிய பஸ் சேவைகளை ஆரம்பிக்க பஸ் வண்டிகள் பற்றாக்குறையாக இருப்பதாக யாழ். மத்திய பஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை யாழ். நகர் மத்திய பஸ்நிலையப் பகுதியில் போதிய கொட்டகை வசதிகள் இல்லாததால் பயணிகள் வெயிலில் நின்று சிரமப்பட வேண்டியிருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

உடனடியாக கொட்டகைகள் அமைக்கப்பட வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-135)


## தேவை - CLERKS

A/L படித்த Typing, ஆங்கிலம் ஓரளவு தேர்ச்சியுள்ள பெண்கள் தேவை. திறமைக்குத் தக்க சம்பளம் வழங்கப்படும். கிழமை நாள்களில் நற்சான்றிதழ்களுடன் காலை 9-00 மணி முதல் நேரில் வரவும்.

பரீட்சைப்பகுதி: BOND INSTITUTES
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(45454)



## துரித மீட்டல்
## வினா - விடை வகுப்பு
### A/L 97

பொருளியல் — திரு. சண் 2-30 — 3-30
வர்த்தகம் — திரு. முரளி 3-30 — 4-30

ஆரம்பம்: 27 - 02 - 1997

### A/L 96 DAY
2ஆவது பிரிவு ஆரம்பம்

பொருளியல் — திரு. சண்
கணக்கியல் — திரு, நித்தியானந்தராஜா (B. B. A.)
வர்த்தகம் — திரு. முரளி
அளவையியல் — R. P. சர்மா

ஆரம்பம்: 27 - 02 - 1997 10 மணி
C. C. A. யாழ்ப்பாணம். (45412)


## கண்ணீர் அஞ்சலி

அரியாலை ப. தெ, வ. அ. கூ. சங்க
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு. சோ. குமாரவேலு அவர்களின் மாமனார்
திரு.வைரவப்பிள்ளை கந்தப்பிள்ளை

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திப்போம்.

பணிப்பாளர், பணியாளர்,
அரியாலை பனைதென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
(சி-188)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக உதவி திட்டப் பணிப்பாளர்
திரு. ஆ. கதிரமலைநாதன்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர் க. இ. ஆறுமுகம்

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.
நலன்புரிச் சங்கம்,
யாழ். பிரதேச செயலகம். (454[illegible])

## செய்திச் சாரம்

### உளவள பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம், பெப். 24
மனநெருக்கடியை இலகுபடுத்தும் உளவளப் பயிற்சிப் பாசறை ஒன்று கடந்தவெள்ளியன்று கொழும்புத்துறை சென்-ஜோசப் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ். நகர கரையோரப் பகுதி பாடசாலைகளில் ஆண்டு ஐந்து வகுப்பில் இருந்து எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இதில் அழைக்கப்பட்டு பயிற்சிக்குட்படுத்தப்பட்டனர்.

கத்தோலிக்க இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் பாசறை நிகழ்ச்சியில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த திட்ட அலுவலர் லெபி, றெட்பானாவைச் சேர்ந்த திட்ட அலுவலர் ஜெனோவா அல்பிறட்டும் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

### மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பும்

நெடுந்தீவு, பெப். 24
நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும்இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளும் எதிர்வரும் வியாழக் கிழமை நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. சு. நடராசலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி போட்டிகளில் பிரதம விருந்தினராக நெடுந்தீவுக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தில்லைநாதன் கலந்து கொள்வார். (ஐ-111)

### மலசல கூடம் அமைப்பு

வலிகாமம் தெற்கு, பெப். 24
உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை நலனோன்பு நிலையத்தில் தங்கியுள்ள சுமார் எண்பது குடும்பங்களின் பாவனைக்கென பத்து மலசல கூடங்களும், இரண்டு குழாய்க்கிணறுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

உடுவில் பிரதேச செயலரின் வேண்டுகோளுக்கமைய அகதிகளுக்கான ஐ. நா தூதரகம் இவற்றை அமைத்து வருகிறது. (ஐ-152)

### நிதி உதவி

நெடுந்தீவு, பெப். 24
நெடுந்தீவில் உள்ள ஐந்து சனசமூக நிலையங்களுக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரின் பிரமாண அடிப்படையிலான நிதியில் இருந்து நூல்கள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவுக்கென தலா 20 ஆயிரம் ரூபா வீதம் [illegible] யாக வழங்கப்பட்டுள்ளது. (ஐ-111)

## வாசகர் திருமுகம்

### எங்களுக்கு உதவக்கூடாதா?

1996 — 1997 கல்வியாண்டில் பேராதனைப் பல்கலைக்கழக அனுமதிபெறும் ஒரு மாணவன் நான். 1996 — 97 கல்வியாண்டில் அனுமதிபெற்ற யாழ். மாணவர்களுக்கான இரண்டாம் படிவம், மகாபொல புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பம் என்பன தபாற் சேவையிலுள்ள சீர்கேடுகளினால் இன்னும் இங்கு கிடைக்கவில்லை.

இந்தக் கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறும் மாணவர்களுக்கு இந்தப் படிவங்களில்லாமலே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. ஆனால் வெளிமாவட்ட பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறும் மாணவர்கள் நிலை கவலைக்கிடமானது. இம்மாணவர்கள் தங்களது போக்குவரத்து காலதாமதங்களைத் தவிர்ப்பதற்காக சில நாள்கள் முன்பாக செல்ல வேண்டியவர்கள்.

மேற்குறித்த இரண்டாம் படிவ கடிதங்கள் 03 - 01 - 1997 திகதியிடப்பட்டதாகவும், கொழும்பிலுள்ள மாணவர்களுக்கு 17 - 01 - 1997 இற்கு முன்பாக கிடைத்துவிட்டதாகவும், அறிய முடிகிறது. எமது பிரதேசத்தில் பல நேர்முகப் பரீட்சைகள், தொழில் வாய்ப்புக்கள், தபால் சேவையின் சீர்கேட்டினால் தவறவிடப்பட்டது யாவரும் அறிந்ததே.

சுமார் நான்கு நாள்களுக்கு முன்னர் யாழ். தபாலகத்துக்கு 60 தபால் பொதிகள் வந்ததாக அறிந்ததிலிருந்து தினமும் நான் சென்று யாழ். தபாலகத்தில் பல்கலைக்கழக கடிதங்கள் இருக்கின்றனவா என விசாரிப்பேன். திருகோணமலை செல்ல கப்பலிற்கு பதிய வேண்டிய அவசரமும் எனக்குண்டு. அன்று (20-02-1997) மீண்டும் தபாலகம் சென்று விசாரித்தபோது பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர், ''உங்கள் அவசரங்களுக்காக நாம் தபாற் பொதிகளை பிரித்து தரம்பிரிக்க முடியாது, நாங்கள் உதவுவதற்கில்லை, என்று கையை விரித்தார். எமது பிரதேசத்திலுள்ள இவர்களே இவ்வாறு கூறும்போது நாம் வேறு யாரையும் எவ்வாறு குறை கூறமுடியும்?

என்னைப்போல் இன்னும் சிலரும் வந்து விசாரிப்பது வழக்கம். எமது மக்களுக்கு செய்யும் ஒரு கடமையாக நினைத்து குறிப்பிட்ட 60 தபால் பொதிகளையும் தரம் பிரித்திருந்தால் எப்பொழுதோ வேலையை முடித்திருக்கலாம். நாமும் எமது கடிதம் அந்தப் பொதிகளுள் அடங்கியுள்ளதா இல்லையா என அறிந்து மேற்கொண்டு எமது செயற்பாடுகளை சிந்திக்க முடியும். ஆனால், விரைவாக தரம் பிரித்து விட்டால் பிறகு வேலையில்லாது இருக்க வேண்டிவரும் என்ற கவலையோ அல்லது அசமந்தப்போக்கோ தபாலகத்தில் ஏற்பட்டுள்ளது என்றே கருதவேண்டி வருகின்றது. காலத்திற்கு காலம் பிற இடங்களில் குற்றச் சாட்டுக்களை திசை திருப்பி தாம் தப்பிக்க முயற்சிக்கும் யாழ். தபாலக அதிகாரிகள் இனியாவது திருந்தி நடப்பார்களா?

அருள்நேசன்
கந்தர்மடம்.

### கடற்றொழிலாளர் பரிதாபநிலை

யுத்தம் என்று ஆரம்பமானதோ அன்றிலிருந்துஇன்றுவரை பாதிக்கப்பட்டவர்கள் வரிசையில் கடற்தொழிலாளர்களே முதன் நிலைப்பட்டவர்கள் ஆவர், இராணுவம் வடமராட்சிக்கு வந்ததன் பின் முழுமையாக பாதிக்கப்பட்டவர்கள் என்றால் அது மீனவர் சமுதாயமே;

கடந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி மீனவர்கள் யாரும் கடலில் இறங்க வேண்டாம் என்று இராணுவத்தினரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் எமது மீனவ சமுதாயம் படும் துன்ப துயரங்கள் கொஞ்சமா? அன்றாடம் பிழைத்து சீவியம் போக்கும் மீனவர் குடும்பங்கள் என்ன நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் என்பதை நான் எழுதாமலே எவரும் புரிந்து கொள்ள முடியும்.

கரையிலிருந்து 400 மீற்றர் கடலில் எல்லைப்படுத்தப்பட்டு அடையாளம் இடப்பட்டு அந்தப் பகுதிக்குள் மீன் பிடிப்பதற்கு ஒரு மணித்தியாலம் தரப்பட்டது. கஷ்டத்திலிருக்கும் மீனவர் என்ன செய்வது? தாம் தாம் சாப்பிடும் கறிக்கு மட்டுமாவது கிடைக்காதா என்ற அங்கலாய்ப்பில் அந்த நேரத்தை பயன்படுத்த முற்பட்டனர். ஆனால் கிடைத்தது அடியும், உதையும் தான். இதுதான் மீனவனின் உண்மையான நிலை.

பின்பு பல நாள்கள் சென்றபின் முயற்சி எடுத்து மீண்டும் தொழில் செய்யத் தொடங்கினர். பத்து நிமிடம் பிந்தினால் மறுநாள் கடலுக்கு செல்வதற்கும் அனுமதி கிடையாது. கரையிலிருந்து கடலுக்கு செல்வதற்கு, அங்கிருந்து கரைக்கு வருவதற்கும், ஏறத்தாழ 45 நிமிடம் வேண்டும். வலையைக் கடலுக்குள் போட்டு பின் அதை இழுத்து சேர்ப்பதற்கே ஒரு மணித்தியாலம் போதாது. அதற்கேற்ற வகையில்தான் தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் மீனவர்கள்.

அன்றாடம் சீவிப்பதற்கு ஒரு தொழிலாளி படும் வேதனைகள் சொல்லில் அடங்கா, இவர்களின் கஷ்டம் ஒரு பக்கம். இவர்களை நம்பியிருப்பவர்கள் நிலை என்ன? இவர்கள் இரு சாரருக்கும் உதவி செய்பவர்கள் யார்? மீனவர்களுக்கு உரியகாலத்தில் உதவி செய்யமுடியாத அதிகாரிகள், அவர்களைப் பற்றி எண்ணுவார்களா? பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இதுவரை மீனவ நிவாரணம் நான்கு கட்டங்களே வழங்கப்பட்டுள்ளது. இந்த நிவாரணம் மீனவர்களின் வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் தீர்க்குமா? தனியார் கடைகளில் மைசூர்பருப்பு கிலோ 25 ரூபாவாக விற்கப்படுகிறது. ஆனால் நிவாரணத்திற்கு வழங்கப்படும் மைசூர் பருப்பின் விலையோ 40 ரூபா 50 சதம். பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை தான் இது. மதிப்புக்குரிய அதிகாரிகளே, எங்களுக்கு நிவாரணம் வழங்க எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள். அந்த நிவாரணத்திற்குப் பதிலாக எமது அடிப்படை உரிமையை, அதாவது நாம் தொழில் செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுத் தாருங்கள், தொழில் செய்வதற்கு.

க. உதயராசா
இன்பருட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அபிவிருத்தியை ஊக்குவிக்க மூன்றாண்டு கால கல்வித்திட்டம்

## யாழ். மாவட்டத்தில் அடுத்தமாதம் முதல் அமுலுக்கு

யாழ்ப்பாணம், பெப். 24

கல்வி அபிவிருத்தி மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை ஊக்குவிக்குமுகமாக 3 ஆண்டுத் திட்டம் ஒன்று அடுத்த மாதம் முதல் யாழ். மாவட்டத்தில் அமுல் செய்யப்படவிருக்கிறது.

கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ள பிரதேசங்கள் இத்திட்டத்தின் கீழ் முதலில் இனங்காணப்படவிருக்கின்றன.

அந்தப் பிரதேசத்தில் உள்ள குறைபாடுகள், மாணவர்கள் மத்தியில் எந்தப் பாடங்களில் தொய்வு நிலை காணப்படுகின்றது, அவற்றை நீக்குவது எவ்வாறு ஆகிய விடயங்கள் ஆராயப்படும்.

குறிப்பிட்ட பாடம் ஒன்றைப் போதிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தடைகள், மாணவர்கள் கற்பதில் உள்ள தடைகள் போன்ற விடயங்களும் ஆராயப்படும்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் மேற்கொள்ளும் இந்த ஆய்வுத் திட்டங்களுக்கு ஒவ்வொருவர் பொறுப்பாக இருப்பர்.

இத்திட்டத்தை செயற்படுத்த வசதியாக தெரிவு செய்யப்பட்ட 30 பேருக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்துப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் சுமார் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் வளப் பங்கீடு செய்யப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படும்.

(ஐ-3)

## உப தபாலகம் திறக்கப்பட்டது

கடந்த 1991 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்காமல் இருந்த புங்குடுதீவு பகுதியிலுள்ள இறுப்பிட்டி உப தபால் அலுவலகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற இந்த உப தபால் அலுவலக திறப்பு விழா வைபவத்தில் வட பிராந்திய பிரதி தபால் மா அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதேவேளை புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த வல்லன் உபதபால் அலுவலகத்தை திறக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தீவுப்பகுதிக்கு குடி தண்ணீர் விநியோகிக்கப் புதிய திட்டம்

### ஐ. நா. தூதரக உதவியுடன்

தீவுப்பகுதியில் நிலவும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் செயற்திட்டம் ஒன்றை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ள 15 'கன்வஸ் பிளாஸ்டிக்' கொள்கலன்கள் தீவுப்பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் நிறுவப்படும்.

உழவு இயந்திரத்துடன் கூடிய 'பௌஸர்'களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்த 'பௌஸர்'கள் மூலம் கொள்கலன்களில் நீர் நிரப்பப்பட்டு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கொள்கலன்களும், உழவு இயந்திரங்கள் மற்றும் 'பௌஸர்' என்பனவும் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

தற்சமயம் கொழும்பு சென்றுள்ள யாழ். அரச அதிபர் யாழ். திரும்பியதும் அவரிடம் இவை ஒப்படைக்கப்படும் என்று தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-3)

## நாலந்தாவின் இடத்துக்கு தாயாரை நியமிக்க சட்டத்தில் இடம் இல்லை

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

படுகொலை செய்யப்பட்ட — இரத்தினபுரி மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் — எம்பியான நாலந்தா எல்லாவெலவின் இடத்துக்கு புதிய எம்.பியாக அவரின் தாயார் நியமிக்கப்படலாம் என்று அடிபட்ட பேச்சுக்களை தேர்தல் ஆணையாளர் அடியோடு நிராகரித்துவிட்டார். அதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் அவர் சொன்னார்.

''கட்சி ஒன்றில் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட எம்.பி ஒருவர் காலமானால் அல்லது இராஜினாமாச் செய்தால் அவரது இடத்துக்கு தான் விரும்பிய ஒருவரை கட்சி நிறுத்த முடியும். ஆனால் மாவட்டம் ஒன்றிலிருந்து விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட எம்.பி ஒருவர் இறந்தால் அல்லது பதவி விலகினால் அவரது இடத்துக்கு விருப்பு வாக்குகளின் வரிசையில் — அதிக வாக்குகளைப்பெற்ற — இதுவரை எம்.பியாகப் பதவி ஏற்காத வரையே எம்.பியாக நியமிக்க முடியும்.

இந்த ஒழுங்கில் தற்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர்கள் பட்டியலில் இன்னும் எம்.பியாகப் பதவியேற்காதவர்களில் விருப்பு வாக்குகளை ஆகக்கூடப் பெற்றிருப்பவர் வி. என். செனவிரத்ன அவரே புதிய எம்.பியாக அறிவிக்கப்படுவார்.'' — என்றார் தேர்தல் ஆணையாளர்.

''ஆனால் மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களில் ஒருவர் உயிரிழந்தால் அல்லது பதவி விலகினால் அவரது இடத்துக்கு தேவையானால் தான் விரும்பிய ஒருவரைக் கட்சி நியமிக்க முடியும். விருப்பு வாக்குகளின் அடிப்படையில் புதியவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் மாகாணசபை, உள்ளூராட்சிசபை ஆகியவற்றுக்கு இல்லை; ஆனால் நாடாளுமன்றத்துக்கு உண்டு.'' — என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் புதிய எம்.பியாக நியமிக்கப்படவிருக்கும் வி. என். செனிவிரத்ன, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ஆவார்.

(உ-150)

## அரசியல்வாதிகளின் ஆயுதங்களை களைய கடும் சட்ட விதிகள்

### அரசு விரைவில் அறிவிக்கும்

கொழும்பு, பெப். 24

அரசியல்வாதிகளிடம் உள்ள துப்பாக்கிகளை மீளப்பெற கடுமையான சட்ட விதிகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராகி வருகிறது.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம் நிதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிசுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இது தொடர்பான அரசின் அறிவித்தல் ஓரிரு தினங்களில் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருக்கும் குற்றத்துக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்க வகை செய்யும் தற்போதைய சட்டங்கள் திருத்தப்படவிருக்கின்றன.

இதேவேளை அரசியல்வாதிகளிடம் உள்ள 4 ஆயிரம் துப்பாக்கிகளையும் திருப்பி ஒப்படைக்குமாறு காலக்கெடு விதித்து அரசாங்கம் அறிவிப்பு ஒன்றை வெளியிட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-150)

## முறைசாராக் கல்விப்பிரிவில் விரைவில் ஆங்கிலப்பயிற்சி

### பிரதிக் கல்விப்பணிப்பாளர் தகவல்

வலிகாமம், தெற்கு, பெப். 24

''யாழ்ப்பாணக் குடாநாட்டில் முறைசாராக்கல்வி பயிற்சி நெறிகள் பலவற்றை எதிர்காலத்தில் ஆரம்பிக்க கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுக்க உள்ளது, முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் இவ்வருடம் முதல் ஆங்கில மொழியை அறிமுகப்படுத்த உள்ளோம்''

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில்— யாழ்ப்பாணம் கல்வி வலயம்—2இன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வீ. இராசையா இவ்வாறு கூறினார்.

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்டங்களில் கடந்த வருடம் நடைபெற்ற பதினொரு பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் அங்கு வழங்கப்பட்டன. உடுவில் கல்விக் கோட்டதிட்டமிடல் அலுவலர் திரு. அ. நடராஜசுந்தரம் இவ்வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

இளம் சந்ததியினர் அரசாங்க உத்தியோகத்தை நம்பியிராது— இங்கு பெறப்பட்ட அனுபவம், அறிவு, திறன் ஆகியவற்றை பயன்படுத்தி சுயமாக உழைக்கவும், எவ்வளவோ இடைஞ்சல்கள் மத்தியிலும் தமது வாழ்வை சிறப்புற அமைத்துக்கொள்ளவும் முன்வர வேண்டும் என்று பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இராசையா மேலும்தெரிவித்தார்.

(ஐ-152)

## தவக்காலச் சிந்தனை

### (13 ஆம் நாள் திங்கள்)

இருளின் செயல்களைக் களைந்து விட்டு அருளின் செயல்களை அணிந்து, இறைவனின் இரக்கத்தையும், அருளினையும் பெற்றுக் கொள்ளும் காலம் தவக்காலமாகும். எமக்கு ஓர் அளவுகோல் தரப்பட்டுள்ளது. ''எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்'' (லூக். 7: 38), நாம் நம்மை நேசிக்கின்றோமென்றால்; அது மற்றவர்களை நாம் அன்பு செய்வதிலே தான் தங்கியுள்ளது.

நீ நிறைவு பெறவேண்டுமா? ஏழையையும் நேசி. அப்போதுமகிழ்வும் நிறைவும் நம்மைத்தேடிவரும் இறைக்காத கிணறுகள் ஊறுவதில்லை. நாமே நமது தீர்ப்புக்களை சான்றுகளை உடையவர்களாக இருக்கின்றோம். புல்லை விதைத்து நெல்லை எதிர்பார்க்க முடியாது. கடந்த காலங்கள் எமக்குப் பயிற்சிக்களங்களாக அமைந்துள்ளன. எனவே தீர்ப்பிடுவதைத் திருத்துவோம். இரக்கம் காட்டுவோம்! மன்னிப்போம்! கோணலானவை நேராகும்; கரடு முரடுகள் சமனாகும்.

- அபிர்ராஜன்

## விதை நெல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உள்ளூர் நெல்லை சேமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம். பெப். 24

தரமான நெல்லை அறுவடை செய்யும் விவசாயிகளை இனங்கண்டு அவர்களிடமிருந்து விதை நெல்லைப் பெற்று சேமித்து வைக்குமாறு யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 1995—96 காலபோகத்தில் வலிகாமம் பகுதியில் இருந்து சகல மக்களும் இடம்பெயர்ந்ததாலும், அக்காலபோகத்தில் ஏற்பட்ட கடும்வரட்சி காரணமாகவும் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் 96—97 ஆம் ஆண்டு காலபோகத்தில் பாரிய விதைநெல் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதை நிவர்த்திசெய்ய தென்பகுதியில் இருந்து 35 ஆயிரம் புசல் விதைநெல்லைக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதும் எதிர்பாராத தடங்கல்கள் காரணமாக உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு விதைநெல் கிடைக்க முடியாது போய் விட்டது.

இருந்த போதும் ஓரளவு தரமான விதைநெல்லை வைத்திருந்த விவசாயிகளிடம் ஏனைய விவசாயிகள் கூடியவிலைகொடுத்து வாங்கி 75% விஸ்தீரணத்துக்குமேல் விதைப்பை மேற்கொண்டனர்.

ஆரம்பத்தில் ஏற்பட்ட வரட்சிகாரணமாக அழிந்த நெல் வயல்களிலும் விதைக்காதிருந்த வயல்நிலங்களிலும் தருவிக்கப்பட்ட வயது குறைந்த 3–3½ மாத இன விதைநெல்லைச் சில விவசாயிகள் விதைத்தனர்.

மார்கழி மாத முற்பகுதியில் ஏற்பட்ட தொடர்ச்சியான மழைகாரணமாக 40 வீதத்திற்கு மேல் நெற்பயிர் அழிவடைந்தது. திரும்பவும் தொடர்ந்து நிலவிய வரட்சி காரணமாக உற்பத்தி மிகவும் பாதிப்படைந்தது. ஆயினும் சிற்சில இடங்களில் ஓரளவு விளைவைப் பெறக்கூடியதாக இருந்தது.

எனவே தொடர்ந்துவரும் 97 – 98 காலபோகத் தேவைக்கு விதைநெல் தட்டுப்பாடு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். இதை நிவர்த்திசெய்ய பிறமாவட்டத்தில் இருந்து விதைநெல்லைப் பெறுதல்வேண்டும். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் பிறமாவட்டத்தில் இருந்து பெற்று உரியநேரத்திற்கு வழங்க முடியாது இருக்கின்றது. எனவே எமது மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லையே எதிர்வரும் காலபோகத்திற்குச் [illegible] நிலைப்பாடு [illegible]ளது.

ஆகவே நெல் அறுவடை தற்சமயம் ஆரம்பித்துள்ளதால் நெற்செய்கையாளர்கள் தரமான நெல்லை அறுவடைசெய்யும் விவசாயிகளை இனம்கண்டு அவர்களிடம் தமக்குத் தேவையான விதை நெல்லைப்பெற்று நல்லமுறையில் சேமித்துவைப்பதுடன், ஏற்கனவே கமநலசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட குறுகிய காலவிதை நெல்லை வாங்கி வைத்திருக்கும் விவசாயிகள் அவற்றை பூச்சி, வண்டுத்தாக்கம் ஏற்படாதவாறு நல்லமுறையில் பாதுகாத்துவைத்து எதிர்வரும் 97 - 98 ஆம் ஆண்டுக் காலபோகத்தில் உரியநேரத்தில் விதைப்பை மேற்கொள்ள ஆவணசெய்யும்படியும், இவை சம்பந்தமான மேலதிக விவரங்கள் தேவைப்படின் தங்கள் பகுதி விவசாயப்போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகின்றேன். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்குண்டு**

3 H / Power உடைய ஐஸ் கிறீம் கொம்பரேசர், ஐஸ் கிறீம் கேஸ் விற்பனைக் குண்டு. தொடர்பு: 564, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [45461]

பழைய ஆர்மோனியங்கள் புதிய ஓர்கன், மெலோடிக்கா விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வார நாள்களில் பிற்பகல் 2.00 மணி. முகவரி வி. செந்தூரன் இல 238, கோயில் வீதி, நல்லூர். [45438]

**தேவை**

தமிழ்க் குடும்பத்தவர் வீட்டில் வேலை செய்வதற்கு 35—45 வயதிற்கு இடைப்பட்ட பெண் உதவியாளர் தேவை. கிறிஸ்தவப் பெண் விரும்பத்தக்கது. அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். பீ. சண்முகநாதன், இல: 23. டச்சுவீதி, சாவகச்சேரி, தரகர்கள் தேவையில்லை. [45349]

## திறந்த பல்கலைக்கழக நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 24

இலங்கை திறந்தபல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையம் இன்று முதல் தற்காலிகமாக யாழ். மத்திய கல்லூரியில் இயங்கவிருப்பதாக பிராந்திய இயக்குநர் திரு. ஞானேந்திரன் தெரிவித்தார்.

இந்தப் பிராந்தியநிலையம் முன்னர் கொக்குவிலில் இயங்கிய இடத்தில் அதை மீளவும் இயங்கச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டதாகவும் —

அப்பகுதியில் உள்ளகண்ணி வெடிகள், பொறிவெடிகள் ஆகியவற்றை அகற்றுவதில் தாமதம் ஏற்டுப் என்பதால் தற்காலிகமாக மத்திய கல்லூரியில் இயங்க முடிவு செய்யப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னர் இந்த நிலையம் யாழ். பல்கலைக் கழகத்தில் தற்காலிகமாக இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(ஐ-3)

## மீண்டும் தாதிசள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 24

கடந்த மாதம் 29ஆம் திகதி யாழ். போதனா ஆஸ்பத்திரியில் நடைபெற்ற தாதிகள் தெரிவுநேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை எதிர்வரும் வியாழனன்று காலை 9மணிக்கு உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கோரியுள்ளார். (ஐ-4)

## பஸ் நிலையத்தில் மலசல கூடம் இல்லை

சண்டிலிப்பாய், பெப். 24

யாழ், நகர் மத்திய பஸ் நிலைய பகுதியில் பொது மலசல கூடம் எதுவும் இல்லாததால் பஸ் பிரயாணிகள் மிகுந்த கஷ்டமடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பயணிகள் பெருமளவில் கூடும் இடமான யாழ். பஸ் நிலையத்தில் மலசல கூடம் நிறுவுவதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும், யாழ். மாநகரசபை இவ்விடயத்தில் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-135

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**முத்துக்குமாரு புலேந்திரகுமார்**

**இசை ஆசிரியை திருமதி பு. தேவமனோகரி**

அவர்களின் கணவரின் மரணத்தால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தென்மராட்சி இசை ஆசிரியர்கள்.**

(சி-190)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 22 — 03 — 1940



இறப்பு: 25 — 01 — 1997

### அமரர் நா. செல்லையா
**(வர்த்தகர்)**

(மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி நாகமுத்து - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரர்)

அன்பின் உறைவிடமாகவும் பாசத்தின் திருவுருவாகவும்
எங்கள் குடும்பத்தின் குல விளக்காய்
சுடர் வீசிய அணையாத தீபமாய் விளங்கிய அப்பாவே!
நீங்கள் எங்கள் எல்லோரையும் மண்ணில்
தவிக்கவிட்டு
விண்ணுலகைச் சென்றடைந்தீர்களே!
என்செய்வோம் நாம்?

24 - 2 - 97 திங்கட்கிழமை இல்லத்தில் நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

மருதங்கேணி,
தாளையடி.

(சி/187)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 05 — 1931



மறைவு: 25 — 01 — 1997

### அமரர் கந்தையா நடராசா

(இளைப்பாறிய நடத்துநர், இ. போ. ச. மொந்திபுலம், காரைநகர்)

அன்பின் பிறப்பிடமே, அருளின் திருவுருவே,
என்றும் எமைமறவா எந்தையே! எம்மை
எந்நாளும் வழிநடத்தி நல்ல நிலைக்கு ஆளாக்கி
வாழும்படி செய்தாய் உன்பிரிவால்
வாடும் எமக்கார் துணையோ?
வருந்துகிறோம்
ஆடும் சிதம்பரனார் அவன்பாதம் வாழ்ந்திடுக.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
''பிருந்தாவனம்''
கிராஞ்சி.

ந. உதயகுமாரன் (கண்ணன்)
இல. 17, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(45450)

## முக்கிய அறிவித்தல்

போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும்
அடையாள அட்டை கவரிடுதலுக்கும்
நியாயமான விலை குறைப்பு
செய்துள்ளோம்.

**சன்லைட் றைக்கிளீனர்ஸ்**
**பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.**

(45453)

## கண்ணீர் அஞ்சலி

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(கிராம அலுவலர், பளை நகரம்)
(முன்னாள் பதில் கிராம அலுவலர் - வேம்போடுகேணி)

உதிப்பு: **02-06-195?** உதிர்வு: **16-02-1997**

தற்துணிவு, கடமைப்பற்று, பரிந்துணர்வு, பெருநட்பு இந் நாற்குணங்கள் கொண்ட நின் சேவையை தெற்குப்புலத்தான் தானும் பெற அழைத்தானோ நின் நற்பணியை இழந்து நிர்க்கதியானோம் நாம்.

**இந்திராபுரம் மக்கள்,**
**சனசமூக நிலையம்.**

இந்திராபுரம்,
முகமாலை.

(சி–189)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 06 — 10 — 1946



மறைவு: 25 — 01 — 1997

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்
திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் பசுபதி மகேஸ்வரன்

(எழுது வினைஞர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், வடக்கு – கிழக்கு மாகாணம்)

அன்னாரின் மறைவையொட்டி இறுதிக் கிரியைகளில் கலந்தும், கடிதம் மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (24 - 02 - 1997) திங்கட்கிழமை திருகோணமலையில் அன்னாரின் இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியை நடைபெறும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

நீதி மன்ற வீதி,
திருகோணமலை.

(45462)

## 31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

தோற்றம்: 19 — 01 — 1921



மறைவு: 25 — 01 — 1997

### திருமதி சரஸ்வதி விஜயரெட்ணம்
**(பேபி அம்மா)**

வெள்ளைத் திருநீறு நெற்றியிலே துலங்க
வெள்ளைத் துகிலுடுத்து வெண்கமலத் தாய்போல்
மேன்மைக் குணத்தோடு மேதினியில் மதிப்பாய்
– வாழ்ந்தவளே
பெற்றிடுக பேரின்ப முத்திக் கரையை.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

75/10A, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(45464)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## படகுப் பலிகள்

கடந்தவார மத்தியில் மன்னார் கடற்பரப்பில் நடைபெற்ற படகு விபத்தில் 130-க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிர் நீத்தனர். தமிழகத்துக்கு அகதிகளாகப் போய் அடைக்கலம் கோரும் பொருட்டே அவர்கள் இந்தத் துரதிர்ஷ்டமான படகுப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

அந்த விபத்தில் அவச்சாவடைந்த எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவோமாக.

வவுனியாவிலிருந்து மன்னாரை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு — எறிகணை வீச்சுக்கும், குண்டு வீச்சுக்கும் — பயந்து தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே அவர்கள் அயல்நாட்டுக் கரை போய்ச் சேர முனைந்திருக்கிறார்கள். ஆனால் காலன் அவர்களின் உயிர்களை கடலிலேயே பறித்துவிட்டான்!

முன்னர் கிளிநொச்சியில் ''சத்ஜய'' இராணுவ நடவடிக்கை நடத்தப்பட்ட போதும், கடந்த வருடம் ஒக்ரோபர் மாத மத்தியில் அகதிகள் படகு ஒன்று மன்னார்க் கடலில் கவிழ்ந்ததில் 14 பேர் உயிரிழந்தனர். அதே படகில் சென்ற ஏனைய 96 பேரும் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

இதேபோல படகுப் பயணங்கள் பலவும், பல தடவைகளில் அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்தது உண்டு-குமுதினிப் படகுப் படுகொலைகள் தொடக்கம் கடந்த வார நாச்சிக்குடா மரணங்கள் வரை வங்கக் கடலில் பல அப்பாவித் தமிழர்களின் உயிர்கள் பிரிந்துள்ளன.

அதேபோன்று வெளி நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுவதற்காக அந்நாடுகளை நோக்கிச் சென்ற ஈழத்தமிழர்களும் பெருங் கடல்களுக்கு இரையானது உண்டு. சமீபத்தில் துருக்கிக்கு அருகில் நடைபெற்ற கப்பல் விபத்திலும் ஈழத் தமிழர்கள் பலியானார்கள்.

இடம்பெயர்பவர்களாகவும் அகதிகளாகவும் ஈழத்தமிழர்கள் மாற்றப்பட்ட பின்னர் அவர்களில் மிகப் பலர் எண்ணிக்கையில் பல்வேறு விபத்துக்கள், தாக்குதல்களால் உயிரிழப்பது வழமையாகிவிட்டது.

மனிதனுக்கு உலகத்தில் எல்லாவற்றையும் விட மேலானதும் பெறுமதியானதும் உயிரே. ஆனால் ஈழத் தமிழர்களின் உயிர்கள் அந்தப் பெறுமதியை இழந்து விட்டனவோ என்று எண்ணுமளவுக்குச் சாவுகள் மலிந்துவிட்டன. எழுபதுகளின் ஆரம்பத்தில் அவர்கள் மீது ஏவப்பட்ட அடக்குமுறையே இத்தகைய ஒரு அனர்த்தத்துக்கு, நாசகாரத்துக்கு வித்திட்டது எனலாம்.

அதன் பின்விளைவுகள், பக்க விளைவுகள், கிளை விளைவுகளாக இப்போது பல வடிவங்களில் தமிழர்களின் உயிர்கள் காவப்படுகின்றன.

தமிழர்களின் அழிவுகளைத் தடுப்பதற்கு அவர்கள் இடம் பெயர்பவர்களாகவும், அகதிகளாகவும், மாறும் நிலை நீக்கப்பட வேண்டும். மொத்தத்தில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அப்போது தான் படகுப்பலி போன்ற வேதனைதரும் சம்பவங்களும் இல்லாமற் போக வாய்ப்புண்டு.

# கொழும்பின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தூதுவர்களுக்கு ஐ.ஜி.பி. விளக்கம்

கொழும்பு, பெப். 24

கொழும்பு, பாதுகாப்பு ஸ்திரத்தன்மை குறித்து பொலீஸ் மா அதிபர் (ஐ.ஜி.பி.) ரி. டபிள்யூ. ராஜகுரு வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து கொழும்பின் பாதுகாப்பு, அதற்காக எடுக்கப்பட்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து விளக்கிக் கூறினார்.

கொழும்பு நகரின் பாதுகாப்பு குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களிடையே உருவாகியிருந்த அச்சநிலையைப் போக்கும் வகையிலேயே இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கலாம் என்று ராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

(உ-3-150)

# கொலை, கொள்ளை, கடத்தல்கள் தலைநகர் கொழும்பில் அதிகரிப்பு!

## வங்கிகளுக்கும், நிறுவனங்களுக்கும் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 24

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கொள்ளை, கொலை, வாகனக் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கொழும்பில் உள்ள முன்னணி பாதுகாப்பு சேவை நிறுவனம் ஒன்று தனது வாடிக்கையாளர்களான நிறுவனங்களுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் இயங்கும் வங்கிகள், உயர் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள அந்த தனியார் நிறுவனம் தமது வாடிக்கையாளர்களான நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே மேற்கண்ட எச்சரிக்கையை தெரிவித்துள்ளது.

''பெரும்பாலும் தினமும் வங்கிக் கொள்ளைகள், வழிப்பறிக் கொள்ளைகள், கொலைகள் நடக்கின்றன. நெடுஞ்சாலைகளில் வாகனங்கள் கடத்தப்படுகின்றன. இத்தகைய செயல்கள் அதிகரித்துள்ளதால் எச்சரிக்கையாக இருங்கள்'' என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-150)

## தமிழர் கைது

கொழும்பு, பெப். 24

பெந்தோட்டை கடற்கரைப் பகுதியில் வைத்து வெள்ளவத்தையைச் சேர்ந்த சுப்பையா சந்திரசேகரம் என்பவரை வலப்பிட்டி பொலீஸார் கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்து ஆஸ்திரேலியப் பிரஜையான மைக்கல் என்பவரின் கடவுச் சீட்டும், 80 ஆயிரம் ரூபா பணமும் பொலீஸாரால் கைப்பற்பட்டன.

ஆஸ்திரேலியப் பிரஜையின் கடவுச்சீட்டை விற்கத் தாம் முயன்றதாக அவர் ஒப்புக் கொண்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3-150)

## அஞ்சலி

கொழும்பு, பெப். 24

மன்னார் படகு விபத்தில் 130 தமிழ்மக்கள் பலியானது தொடர்பாக அஞ்சலி செரிவித்தும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவருக்கு அனுதாபம் தெரிவித்தும் புளொட் அமைப்பு நேற்றுக் காலை கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

(உ)

# 42 நாள்களாவது ஐ.ஜி.பியாக இருக்க அலையும் டி.ஐ.ஜி!

கொழும்பு, பெப். 24

பொலீஸ் மா அதிபர் ரி. டபிள்யூ. ராஜகுரு ஓய்வு பெற்ற பின்னர், 42 நாள் சேவையில் இருக்கப்போகும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவர், பொலீஸ்மா அதிபர் பதவியைப் பெறுவதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முக்கியஸ்தர்களின் பின்னால் திரிவதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

பொலீஸ் மா அதிபர் ரி. டபிள்யூ. ராஜகுரு ஜூன் மாதம் 20 ஆம் திகதி ஓய்வு பெறப் போகிறார்.

அவருக்கு அடுத்த நிலையில் உள்ள பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவர் அதற்குப்பின் 42 நாள்கள் கழித்து ஓய்வு பெறுவார்.

இந்த 42 நாள்களாவது தாம் பொலீஸ் மா அதிபராக இருக்க வேண்டும் என்பது அவரது ஆசை; அதற்காக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களின் பின்னால் அவர் அலைகிறார் — என்று அந்தப்பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

(உ- 3- 150)



## மறக்குமா அகிலம் உன்னை?

எண்ணமே, உயிரே, மூச்சே,
இதயமே, எழிலே! நாளும்
கண்ணிமைக் குள்ளே வாழும்
காட்சியே! தமிழர் வாழ்வின்
பண்ணே! நல் விருந்து சொரி
பழச் சோலைக் குலையே! எங்கள்
அண்ணலே, தெய்வப் புலவரே! மறக்குமா
அகிலம் என்றாவது உன்னை?

எழுச்சியின் திறவு கோலே!
எண்ணத்தின் நாற்றாங் காலே!
விழிப்புற்றே மக்கள் வாழ
வழிசொல்லும் குறளைத் தந்தாய்
தொழுகின்ற இறையே! வாழ்வின்
தொகை நூலே! மனிதன் வாழ்வாங்கு
வாழுகின்ற வழிநெறி வகுத்தகோவே!
வாழ்த்துகிறோம் உன்தெய்வப் புலமையை.

[illegible]

(இன்று திருவள்ளுவர் [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் பாவனைக்கு கட்டுப்பாடு

பொதுமக்களின் சேவைகள் இல்லாத நேரத்திலேயே தேர்தல் கடமைகளுக்கு பஸ்களை வழங்கவேண்டும் என்று போக்குவரத்து, மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத் முதலி மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துக் கம்பனிகளின் இயக்குநர் சபைகளுக்குக் கண்டிப்பான பணிப்புரை விடுத்துள்ளார்.

பொது மக்களின் சேவையைப் பாதிக்கும் வகையில் தேர்தல் பணிக்கு பஸ்களை வழங்கவேண்டாம். பயணிகளின் நேர அட்டவணையைப் பொறுத்து லீவான நேரத்தில் மட்டும் தேர்தல் சேவைக்கு வாகனங்களை வழங்கலாம் — என்றும் அவர் தமது பணிப்புரையில் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீமனி அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடாததும் —

தேர்தலில் நடுநிலைமை வகிக்கப்போவதாகவும் அறிவித்ததும் — தெரிந்தவையே.

# தனியார் பாடசாலைகளின் ஆசிரியர் இணையம் அமைப்பு

குருநகர், பெப். 24

தனியார் பாடசாலை ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக தனியார் பாடசாலை ஆசிரியர்களின் இணையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களினதும், தனியார் பாடசாலை ஆசிரியர்களினதும் சம்பள விகிதத்தில் காணப்படும் முரண்பாடுகளை கல்விஅமைச்சு மட்டத்துக்கும், பொதுமக்கள் மத்தியிலும் சுட்டிக்காட்டி உரிய நடவடிக்கைகளை எடுக்கவே இந்த இணையம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக அதன் தலைவர் வே. யுகபாலசிங்கம் தெரிவித்தார்.

இணையம் அமைப்பது தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளியன்று காலை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. ஜேசுதாசன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் பி. பெனடிக்ற், தனியார் பாடசாலைகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த வே. யுகபாலசிங்கம், சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட் திரு. இ. பேனாட் ஆகியோர் அங்கு உரையாற்றினர்.

அரச பாடசாலை ஆசிரியர்களுக்கும் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் இடையே காணப்படும் சம்பள முரண்பாடு தொடர்பான அறிக்கை ஒன்றும் அங்கு வெளியிடப்பட்டது.

# தனியார் பாடசாலை ஆசிரியருக்கு தனியான ஆசிரிய சேவை

## கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

குருநகர், பெப். 24

தனியார் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கென தனியான ஒரு ஆசிரிய சேவை விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உபசேன சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் பாடசாலைகளின் ஒன்றியத் தலைவர் திரு. வே. யுகபாலசிங்கத்துக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அரச பாடசாலை ஆசிரியர்களை உள்ளீர்த்து அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவையை ஒத்ததாக இந்த தனியார் பாடசாலை ஆசிரியர் சேவையும் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அமுலுக்கு வந்துள்ள புதிய சம்பள நிர்ணயத்தில் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களினதும், தனியார் பாடசாலை ஆசிரியர்களினதும் சம்பள மீளாய்வில் காணப்படும் வேறுபாட்டைச் சீர் செய்யுமாறு கோரி தனியார் பாடசாலைகளின் ஒன்றியம் கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

(ஐ-51)

## நாளை

**மாசி 14**

**செவ்வாய்க்கிழமை**

**திதி:** திருதியை முன்இரவு 9-56 வரை.

**நட்சத்திரம்:** அத்தம் காலை 5-43 வரை.

**ராகுகாலம்:** 3.30 - 5-.00

**சுபநேரம்:** 11.00-12-30

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## இராணுவத் தாப்பு மறுப்பு

கொழும்பு, பெப். 24

யுத்த அலை தற்போது புலிகளுக்குசாதகமாகஅமைந்துள்ளது எனத் தெரிவித்து சிங்கள வார இதழான 'லக்பிம'வில் நேற்று முன்தினம் வெளியாகியிருக்கும் செய்தி முற்றிலும் ஆதாரமற்றது என்று இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் ரி. ரி. ஆர். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

புலிகளிடம் பீரங்கிகள் இருப்பது இராணுவ நடவடிக்கைகளுக்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது என 'லச்பிம' தெரிவித்திருப்பதையும் இராணுவத் தலைமையகம் மறுத்திருப்பதாக இலங்கை வானொலி அறிவித்துள்ளது.

(உ-5)

## தள்ளாடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை பாதுகாப்பு அமைப்பு முன்னெடுத்தது.

பலரும் இவ்வாறு அனுமானிப்பதாக வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

77 கிலோ மீற்றர் நீளமான வவுனியா — மன்னார் சாலையை படையினர் தமது கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருப்பது மிகக் கஷ்டமான காரியம் என்றும் அது சுட்டிக்காட்டியது. (உ-3)

## வில்பத்துக்குள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றியுள்ளதால், வில்பத்து சரணாலயக் காட்டுப் பகுதிக்குள் புலிகள் ஊடுருவ முடியாத நிலை ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

மன்னார், சற்பிட்டி, புத்தளம், சிலாபம் ஆகிய பகுதிக் கடற் பாதையைப் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தால் மட்டுமே வில்பத்துக் காட்டுக்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க முடியும் — என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-150-3)

## பாதையருகே...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பையடுத்து அந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒருபகுதியினர் மடுத் தேவாலயப் பகுதிக்கும், மறுபகுதியினர் வவுனியா நகருக்குள்ளும் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## வடக்கே...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகவலை வெளியிட்டன.

இந்தப் பாரிய நடவடிக்கை வெற்றி தராவிட்டால் அது பெரும் தோல்வியாகவே முடியும்.

இந்த நடவடிக்கை மூலம் இப்பாதை திறக்கப்பட்டால், யுத்தத்தின் தோற்றத்தை அது மாற்றிவிடும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## மன்னாரைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

மடுவைச் சுற்றியும், பூநகரி முகாம்பகுதியிலும்விடுதலைப் புலிகள்இன்னமும் உள்ளனர். இலகுவில் அவர்கள் தாக்குதல் நடத்தும் அபாயம் உள்ளது என்பதை மறுக்க முடியாது.

அதேநேரம் புலிகளுக்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்களின் ஒரு நடவடிக்கையேஇந்த ''எடிபல'' இராணுவ நடவடிக்கை என்று படையினர் தெரிவித்துள்ளனர்—என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3-150)

## ஆறாயிரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு முகாமில் கைப்பற்றிய ஆட்லறிகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வவுனியா படை முகாம்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். அச்சமயம் 29 ஷெல்கள் அவர்களால் ஏவப்பட்டன. ஏனைய ஷெல்களும் ஆட்லறிகளும் அவர்களிடம் இன்னமும் உள்ளன — என்று அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-150-3)

## வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயனாக மன்னார்-வவுனியா பாதை பிரதான விநியோகத் தடமாகியுள்ளது. அத்துடன் மதவாச்சி — மன்னார் வீதியும் படையினர் கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

இதன் காரணமாக மன்னாரின் தென்பகுதி புலிகளின் தாக்குதலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. புலிகள் இனித் தாக்குதல் நடத்த வேண்டுமானால் படையினரின் பாதையை ஊடறுத்தே செல்ல வேண்டும்.

அத்துடன் தந்திரிமலை, புத்தளம் பகுதிகளும் புலிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகப் படையினர் தெரிவிக்கின்றனர்.

மன்னாருக்கு கடல் மூலமாக துருப்புக்கள் மேற்கொண்ட விநியோகம் இனிமேல் தரைமார்க்கமாக இடம் பெறவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது — இப்படி அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-3-150)

## 'டம்மி'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''சண்டே ரைம்ஸ்'' இத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஆளில்லாத தானியங்கி உளவு விமானம் சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலைக்கு வடக்கே தரையில் 120 மி. மீ. ஆட்லறியை படம் எடுத்துள்ளது.

உடனடியாக அந்த இடத்துக்கு குண்டுவீச்சு விமானம் அனுப்பப்பட்டது ஆனால் உளவு விமானம் படம் எடுத்த — குறிப்பிட்ட — இடத்தில் அந்த ஆட்லறியைக் காணவில்லை. இதனால் அந்த விமானம் திரும்பி விட்டது.

''விடுதலைப் புலிகள் முல்லைத்தீவில் கைப்பற்றிய ஆட்லறிகளைப் போன்ற 'டம்மி'களைத் தயாரித்து பல இடங்களிலும் வைக்கிறார்கள். அந்தப் பகுதி மீது விமானப்படையினர் தாக்குதல் நடத்தட்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்'' — என விமானப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

— இப்படி அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது. (உ-3-150)


## JAFFNA HINDUITES ASSOCIATION

யாழ்ப்பாணம் 'ஹிண்டுயிட்ஸ்' சங்கம் பெப்ரவரி முதல் வாரம் புனரமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளது. அங்கத்தவர்களாகச் சேரவிரும்பும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் இடைக்கால நிர்வாக சபையின் தலைவருடன் அல்லது செயலாளருடன் அல்லது பொருளாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப் படுகின்றார்கள்.

நன்றி.

சப்டன் என். சோமசுந்தரம் (தலைவர்)

சண். தயாளன் (செயலாளர்)

எஸ் கிருஷ்ணகுமார் (பொருளாளர்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/191)


கொழும்புக்குள் ஊடுருவி

# பிரமுகர்களின் வாகன அணிகளை தாக்குவதற்கு புலிகள் திட்டமாம்!

கொழும்பு, பெப். 24

கொழும்புக்குள் ஊடுருவி முக்கிய பிரமுகர்கள் (வி.ஐ.பிக்கள்) செல்லும் வாகன அணியைத் தாக்க புலிகள் திட்டமிட்டிருந்தார்கள் என்று கிடைத்த தகவலையடுத்து, கொழும்பில் உள்ள முக்கிய பிரமுகர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்குவது என்று அரசு முடிவு செய்திருக்கின்றது.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் பிரமுகர்கள் செல்லும் வாகன அணியை தாக்கவும்—

ஏதேனும் முக்கியகட்டடம் ஒன்றுக்குள் புகுந்து அதைத் தாக்கவும்—

புலிகள் திட்டமிட்டிருந்ததாகத் தகவல் கிடைத்தது.

தற்கொலைத் தாக்குதல் படையினர் அணியும் நான்கு ஜக்கெட்டுக்கள் மற்றும் ஆயுதங்கள் சிலாபம் முந்தல் பகுதியில் அண்மையில் கைப்பற்றப்பட்டமையினால் இந்த வகையான தாக்குதல்கள் தவிர்க்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன— இப்படி அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## யாழ்ப்பாணத்துக்கு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலை நாட்டப் போவதாக ஜனாதிபதி அங்கு உறுதி கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானத்தை விரும்பாத விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடிப்பதில் அரசாங்கம் பல்வேறு சாதனைகளைப் பெற்றுள்ளது.

வடக்கில் முக்கால் வாசிப் பிரதேசத்தையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் படையினர் கொண்டு வந்துள்ளனர்.

அரசு வழங்கியுள்ள சரியான தலைமைத்துவம், மனித உறுதிப்பாடு ஆகியவற்றின் காரணமாகவே படையினர் இந்த வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

இறுதித் தீர்வு அரசியல் அடிப்படையிலானதாக இருக்கும். யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து நாடெங்கிலும் சமாதானத்தை நிலைநாட்ட அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது — என்றார்.

## இன்றும். .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் செய்ய முடியும் என்றும்—

மன்னாருக்கு செல்ல சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்து அனுமதி பெற்ற பொதுமக்களும் இக் கப்பல்களில் செல்ல முடியும் என்றும்—

யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் வேறுமாவட்டங்களுக்கு செல்ல பதிவு செய்தவர்களில் 188முதல் 202 வரை, 409 முதல் 524 வரை மற்றும் 533, 535, 538 ஆகிய பட்டியல்களில் இடம் பெற்றுள்ளோரை யாழ் மத்தியகல்லூரி மைதானத்துக்கு இன்று அல்லது நாளை காலை 7 மணிக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## மடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு, மடுவில் இருந்து வரும் லொறிகளில் அவற்றை ஏற்றி அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன —என்று தெரிவிக்கப்பட்டது (உ-3)

## மன்னார் - யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

இப்படியான வாய்ப்புஇருக்கின்ற போது ஏன் பூநகரி முகாமை வாபஸ்பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் அனைத்து யுத்த யுக்திகளும் குறுகிய நோக்கத்துடனேயே செய்யப்படுகின்றன என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கவலை வெளியிடுகின்றனர்-இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3-150)

## தம்மைக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

''உள்ளூராட்சித் தேர்தல் காலத்திலேயே என்னைக் கொல்ல இந்த சதித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் நான் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வேன். எனக்குப் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' — என்று அவர் கேட்டுள்ளார். (உ-3-150)

# ராஜீவ் கொலையுடன் சந்திரசுவாமி தொடர்பு?

## ஜெயின் ஆணைக்குழு விசாரணை

சர்ச்சைக்குரிய இந்திய சுவாமியாரான சந்திரசுவாமிக்கு ராஜீவ் கொலை வழக்கில் தொடர்பு இருப்பதாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருப்பதை அடுத்து அவரையும் அவரது செயலாளர் விக்ரம் சிங்கையும் இன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு ஜெயின் ஆணைக்குழு உத்தரவிட்டிருக்கின்றது.

ராஜீவ் கொலை தொடர்பான சதி அம்சங்களை ஜெயின் ஆணைக்குழு ஆராய்ந்து வருவது தெரிந்ததே.

வருமானவரித் துறையினர் அண்மையில் நடத்திய சோதனைகளின் போது —

இலங்கையில் உள்ள நபர் ஒருவருக்கு பெரும் தொகையான பணத்தைச் செலுத்தும்படி கோரும் உத்தரவு அடங்கிய ஆவணம் ஒன்றையும், இலங்கையில் உள்ள பிரபல தொழில் அதிபரிடமிருந்துஇந்திய நாணயப்படி பத்து லட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டதற்கான ஆவணம் ஒன்றையும் —

சந்திரசுவாமியின் செயலாளரான விக்கிரம்சிங் வசம் இருந்து கண்டு பிடித்துள்ளனர்.

அதனை அடுத்து சந்திரசுவாமியையும் அவரது செயலாளரையும் விசாரிக்க ஜெயின் ஆணைக்குழு முடிவு செய்ததாகக் கூறப்படுகின்றது.

ஒரு மோசடி வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள சந்திரசுவாமி, அந்த வழக்கில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவுடன் சேர்த்துக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளார்.

சந்திரசுவாமி, நரசிம்மராவின் நெருங்கிய நண்பர் என்பதும் —

ராஜீவ் கொலையை அடுத்து நரசிம்மராவ் இந்தியப் பிரதமரானார் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். (உ)

## மேலும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் இருந்து 2 ஆயிரத்து 479 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 757 பேரும்—

நெடுங்கேணி பிரதேசசெயலர் பிரிவில் இருந்து 931 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 995 பேரும்—

இதுவரை வவுனியா நகருக்குள்வந்துள்ளனர்.

இவர்களுக்கு இருப்பிட வசதிகள் மற்றும் உணவு வசதிகள் செய்ய முடியாத நிலையில் அரச அதிகாரிகள் திண்டாடுவதாக வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களை தங்கவைக்க விசேட ஏற்பாடுகள் செய்வது குறித்து வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவும் மாகாண சபை அதிகாரியான ரங்கராஜனும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப்புடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

இருமணித்தியாலங்கள் நடந்த இப்பேச்சுக்களின் பின்னர் உடனடி நடவடிக்கையாக உணவு, மருந்து வகைகளை அனுப்ப அமைச்சர் அஷ்ரப் தனது அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (உ-3-150)

## தீ விபத்தில் 200 பேர் பலி!

கிழக்கிந்திய மாநிலமான ஒரிஸாவில் நேற்று ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் 200 பேர் கொல்லப்பட்டனர்; 700 பேர் காயமடைந்தனர்.

ஆரிபாஷா என்ற இடத்தில் இந்து சுவாமி ஒருவருக்கு மரியாதை செலுத்தும் முகமாக ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட சமயச் சடங்கு ஒன்றின் போதே இந்தீவிபத்து இடம்பெற்றது.

மூங்கில்களாலும், வைக்கோலாலும் செய்யப்பட்ட மேடை தீப்பற்றிக் கொண்டதாக சில செய்திகள் கூறுகின்றன.

மின்சார கம்பிகள் ஒன்றுடன் ஒன்று உரசியதால் தீ பற்றியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3)

## வன்னிக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பனவு சீராக வழங்கப்படவில்லை.

பல மாதங்களாக இந்தக் கொடுப்பனவுகள் நிலுவையாக உள்ளன.

இந்த நிலுவையை உடன் வழங்கவேண்டும் என்றும் —

கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் என்றும் —

லொறி உரிமையாளர் சங்கம் பல மாதங்களாக கோரி வந்தது. ஆனால் கோரிக்கைகள் உரிய முறையில் தீர்த்து வைக்கப்படவில்லை.

இதனால் முன்னறிவித்தல் கொடுத்து, அதன்படி, இந்த மாதம் முதலாம் திகதி முதல் தமது லொறிகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் சேவைக்கு விடுவதை இச்சங்கம் நிறுத்திக் கொண்டது.

இதனாலேயே மேற்படி நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

இதனால் வவுனியாவுக்கு வெளியே வன்னிப்பகுதியில் நிவாரணம் பெறும் ஒரு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் — என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 2[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org